# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. முதலெழுத்துகள் ______________ .
( 12, 30, 18 )

2. திருமலைக்கடலில் வந்து கலக்கும் ஆறு ______________ .
( மகாவலி, பாலாவி, களனி )

3. நாம் ஒருவர் செய்த நன்றியை ______________க் கூடாது ·
( செய்ய , மறக்க, செல்ல )

4. இங்கே பல எழுதுகோல்கள் உள்ளன. ______________ சிறந்ததைத் தேர்ந்தெடு·
( அவற்றுள் , இவற்றுள் , ஒவ்வொன்றும் )

5. உண்மையான நண்பர்களின் நட்பே நமக்கு______________த் தரும்.
( உயர்வை, தாழ்வை, தீயதை )

6. காட்டு அரசனாக வாழ்ந்த விலங்கு ______________ .
(முயல், கரடி, சிங்கம்)

7. நான் நேற்று தொலைக்காட்சியில் படம் ______________.
( பார்த்தேன், பார்த்தோம், பார்ப்போம் )

8. கடமையைச் செய்யத் ________________ .
(எண்ணாதே, தவறாதே, வருந்தாதே )

9. **குறள்:**
அறிவுடையார் எல்லாம் உடையார் ________________
என் உடையரேனும் இலர்
( அரிவிலார், அறிவிளார், அறிவிலார் )

10. நாம் ________________ மதிக்க வேண்டும்.
( பெற்றோரை, பெற்றோருக்கு, பெற்றோர் )

11. எல்லாளன் கட்டிய குளம் ________________ .
( மாங்குளம், வவுனிக்குளம் , சேந்தான்குளம் )

12. யாழிசைப்போர் ________________ என அழைக்கப்பட்டனர்.
( வேடர், கூத்தர், பாணர் )

13. நிலவனால் சிற்பம் ________________ .
( செதுக்கப்பட்டது, செதுக்கினான், செதுக்குவான் )

14. கப்பல்கள் தரித்து நிற்கும் இடம் ________________ என அழைக்கப்படும்.
(பட்டினம், துறைமுகம், கால்வாய் )

15. கிளித்தட்டு விளையாடுபவர் ________________ கன்னையாகப் பிரிந்து நிற்பர்.
( 3, 4, 2 )

16. காகம் கரையும். அது போல கிளி _______________ .

( கூவும், கத்தும், பேசும் )

17. திருகோணமலை இலங்கையின் _______________ த் திக்கில் அமைந்துள்ளது.

( கிழக்கு, மேற்கு, வடக்கு )

18. பெரிய இதழ் உடைய பூ _______________.

( மகிழம்பூ, தாழம்பூ, மல்லிகைப்பூ )

19. _______________ கண்ணகிக்கு சிலை வடித்தான் .

( நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன், இளங்கோ )

20. திருமலையில் உள்ள வெந்நீர்க்கிணறுகள் _______________ .

( ஏழு, ஆறு, எட்டு )

21. **நொடி:**

வெட்டினால் வெட்டுப்படார்; கட்டினால் கட்டுப்படார்;
விட்டுப்பிரியமாட்டார் ; கிட்டவே வருவார். அவர் யார்?

_______________

(நிழல், வானம், நிலம் )

22. _______________ ஆடிப்பிறப்பன்று ஆடிக்கூழ் குடித்தான்.

( நான், நீ, அவன் )

23. முழங்கல் என்பது ______________ .

( ஒழித்தல், ஒளித்தல், ஒலித்தல் )

24. பழனங்கள் என்பது ______________ .

( காடுகள், மலைகள், வயல்கள் )

25. 400 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ______________ .

( நாநூறு, நான்னூறு, நானூறு )

26. ஆடிப்பிறப்பு கொண்டாடப்படும் மாதம் ______________ .

( தை, ஆடி, மார்கழி )

27. ஒரு பக்கம் மட்டும் தோற்கண் உள்ள முழவு ______________ .

( உடுக்கு, முரசு, மேளம் )

28. கங்காரு ______________ குட்டியை வயிற்றுப் பையில் காவிச் செல்லும்.

( தனது , எனது, உனது )

29. வருகின்ற சனிக்கிழமை தமிழ்த்திறன் போட்டி ______________ .

( நடைபெறும், நடைபெற்றது, நடைபெறுகின்றது )

30. நல்ல பண்புள்ள மாந்தனை உருவாக்குவது ______________ .

( நாடு , குடும்பம், உலகம் )

புள்ளிகள் 30

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| வண்ணவண்ண | கலகல | மடமட |
| திரள்திரளாக | ஓட்டமும் நடையுமாக | |

1. மாதவி ______________________ எனச் சிரித்தாள்.

2. திருவிழாவிற்கு மக்கள் ______________________ ச் செல்கின்றனர்.

3. பூஞ்சோலையில் ______________________ மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

4. சேந்தன் பள்ளிக்கு நேரமாகிவிட்டதால் ______________________ ச் சென்றான்.

5. வேழன் தாகத்தால் நீரை ______________________ எனக் குடித்தான்.

புள்ளிகள் 05

## 3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.

1. நாம் ஒலிவட்டில் உள்ள உரையாடலைக்

   ______________________ .

2. நேற்று நானும் எனது நண்பனும் நூலகத்துக்குச்

   ______________________ .

3. **பழமொழி:**

   இனிய நண்பனை இடுக்கணில் ______________________ .

4. பறை தொன்மையும் சிறப்பும் ______________________ .

5. யாழ் நரம்புக்கருவி வகையைச் ______________________ .

புள்ளிகள் 10

## 4) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒருநாள் ஓவியன் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். அப்போது, அவன் வழியில் ஒரு பறவையைக் கண்டான். அது பறக்க முடியாமல் நிலத்தில் விழுந்து கிடந்தது. ஓவியன் அதைக் கையில் எடுத்து அன்போடு தடவினான். அப்பறவை அச்சத்தால் நடுங்கியது. அதற்கு ஒரு கால் முறிந்திருந்தது. ஓவியன் அப்பறவையை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். அதன் காலுக்கு மருந்து இட்டான். ஓவியன் பறவைக்கு உணவு கொடுத்தான். பறவை குணமடைந்ததும் அதனைப் பறக்கவிட்டான். பறவையும் மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது.

1. ஓவியன் எங்கிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தான்?

______________________________

2. ஓவியன் வழியில் எதைக் கண்டான்?

______________________________

3. பறவை எங்கே விழுந்து கிடந்தது?

______________________________

4. பறவை எதனால் நடுங்கியது?

______________________________

5. யார் பறவைக்கு உணவு கொடுத்தான்?

______________________________

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொற்களைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| உதவி | மாலையில் | பாடங்களை |
| முகம் | அம்மா | |

அகரனும் அகமதியும் அண்ணா தங்கை. இருவரும் அவர்களின்

________________, அப்பா சொற்கேட்டு நடப்பார்கள். அம்மாவிற்கு

________________ செய்வார்கள். ஒவ்வொருநாளும் காலையில்

குளிப்பார்கள். பள்ளியிலும் ________________ நன்றாகப்

படிப்பார்கள். பள்ளி முடிந்தவுடன் ________________ சிறிது

நேரம் வெளியே விளையாடுவார்கள். வீட்டுக்கு வந்ததும்

________________, கை, கால் கழுவுவார்கள். பின்பு

வீட்டுப்பாடங்களைச் செய்வார்கள். அகரனும் அகமதியும் நல்ல

பிள்ளைகள்.

புள்ளிகள் 10

## 6) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. கூலங்களில் செய்யப்படும் இரு பண்டங்களைத் தருக.

___________________________________________

___________________________________________

2. எமது மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றைத் தருக.

___________________________________________

___________________________________________

3. தமிழ்மொழியின் முப்பிரிவுகளும் எவை?

___________________________________________

___________________________________________

4. திருகோணமலையை வேறு எப்படி அழைப்பர் ?

___________________________________________

___________________________________________

5. மிருதங்கம் என்று அழைக்கப்படும் தோற்கருவியின் பண்டைய பெயர் என்ன?

___________________________________________

___________________________________________

| புள்ளிகள் 10 |
|---|



TEDC

## 7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| பிளிறுகின்ற | தேடி | செய்து |
| பகிர்ந்து | செல்ல | |

1. நான் வருகின்ற மாதம் ஊருக்குச் ____________ உள்ளேன்.

2. அறிவன் வீட்டுப் பாடத்தை விரைவாகச் ____________ முடித்தான்.

3. நாம் நல்லவர்களைத் ____________ நட்புக் கொள்வோம்.

4. ____________ யானையைக் கண்டு குழந்தை அழுதது.

5. காகம் உணவுகளைப் ____________ உண்ணும்.

புள்ளிகள் 05

## 8) மிகப் பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. வாணன் பேருந்தில் ____________ வந்தான். ( ஏரி, ஏறி )

2. தைப்பொங்கல் ____________ திருநாள். (உழவர், உலவர்)

3. ____________ இனிப்புச் சுவை உடையது.( கரும்பு, கறும்பு)

4. அம்மா முற்றத்தில் ____________ போட்டார். ( கோளம் கோலம்)

5. கடற்கரையில் ____________ ஓடித்திரியும். (நண்டு, நன்டு)

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**



ஒரு நாள் தேன்மொழி .........

புள்ளிகள் 15



TEDC